<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2018 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | அய்யப்பன் | நாள் | 30.01.2023 |
| தகப்பனார் பெயர் | சிவசாமி | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

11) மல்லிகுந்தத்தில் இருந்து கூணாண்டியூர் செல்லும் தார் சாலையில் தெற்காக அமைந்துள்ள வழித்தடத்தை தான் நாங்கள் எங்கள் சொத்திற்கு சென்று வருவதற்கு பயன்படுத்தி வருகிறோம் என்றால், சரிதான்.

12) எங்கள் குடும்பத்தினரும், என் பெரிய தாத்தா குருசாமி குடும்பத்தினரும் மேற்படி தடவழியை கூட்டாக பயன்படுத்தி வருகிறோம் என்றால், சரிதான். ஆனால் மேற்படி தடவழியை நாங்கள் தான் பிரதானமாக பயன்படுத்தி வருகிறோம். எங்கள் பெரிய தாத்தா குருசாமி குடும்பத்தினருக்கு மேற்படி தடவழியை விட்டால் மாற்று தடவழி உள்ளது, ஆனால் அவர்களுக்கு மேற்படி சர்வே எண்ணில் வெவ்வேறு இடங்களில் சொத்துக்கள் அமைந்துள்ளதால் அவர்களுக்குள்ள சொத்துக்களுக்கு செல்வதற்கு மேற்படி தடவழி எளிதாக உள்ளதால் அதை பயன்படுத்தி வருகின்றனர்.

13) மேற்படி தார்சாலையிலிருந்து தெற்காக செல்லும் தடவழிக்கு கிழக்குபுறமாக பச்சியப்பன் மற்றும் தேவன் ஆகியோர்களது நிலம் உள்ளது என்றால், சரியல்ல. மேற்படி தடவழிக்கு கிழக்கு மற்றும் மேற்கு புறத்தில் 1ம் பிரதிவாதி பரமசிவத்தின் நிலம் தான் உள்ளது. நான் சொல்வது பொய்யானது என்றாலும், மேற்படி தடவழிக்கு கிழக்குபுறத்தில் பச்சியப்பன் மற்றும் தேவன் ஆகியோர்களது நிலம் உள்ளது என்றாலும், சரியல்ல.

14) நான் சொல்வது போல் பிரதிவாதிகளின் நிலத்திற்கு நடுவில் எவ்வித தடவழியும் செல்லவில்லை என்றாலும், மேற்படி பச்சியப்பன் மற்றும் தேவன் ஆகியோர்களது நிலத்திற்கு மேற்குபுறம் தான் தடவழி செல்கிறது என்றாலும், சரியல்ல.

15) அப்புசாமி என்பவர் எனக்கு என்ன உறவு என்றால், என் தந்தை வழி

கொள்ளுபாட்டன் ஆவார். மேற்படி என் கொள்ளுபாட்டனுக்கு லிங்குசாமி, பரமசிவம், மைலேசன் (எ) மயில்சாமி, சோமசுந்தரம், குருசாமி ஆகிய ஆண் வாரிசுகளும், இரண்டு பெண் வாரிசுகளும் உள்ளனர்.

16) மேற்படி ஆண்வாரிசுகளுல் லிங்குசாமியும், மைலேசன் (எ) மயில்சாமியும் அவர்களது பாகத்தை 3ம் நபர்களுக்கு விற்றுவிட்டனர் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி பரமசிவத்தின் பாகத்தை அவரது மகன்களான சிவசாமி மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர்கள் அனுபவித்து வருகின்றனர் என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.